Ti Ta Nb Zr Ss Ni Pt

**Ti Anode Fabricators Pvt. Ltd.**

An ISO 9001 : 2015 Company

Tiaano® Innovation In Inert Metals since '92

#48, Noothanchary, Madambakkam, Chennai - 126. Ph.: +91 44 2278 1148, +91 94445 69900 Fax: 2278 1362 Email: marketing@tiaano.com Web: www.tianode.com

## "கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா"

## GOAL 2016-2017

- **Endeavour** : QUALITY
- **Turnover Target** : 120% ↑
- **Products for ...**
  - Consumer Market : 3%
  - Green Environment : 25%
- **Rejection Rate** : 100% ↓

## TESTIMONIALS

- **Customers...**
  - Up to Sep. 16 : 985 Nos.
  - Up to Aug. 16 : 979 Nos.
- **Performance Sep. 16 ...**
  - Turnover growth : 4.11%
  - Employment growth : -1.07%
  - 100% Attendance : 11.76 %

## MANAGEMENT

- **Managing Director**
  - Mr. V. P. Jeyakumar
- **Board of Directors**
  - Ms. P.E. Nancy
  - Mrs. J. Vanajambika

## OUR FORMULATIONS

- Tiaano – Electro Chemical & Exotic Metal Equipments
- Aquafil – Water Treatment Equipments.
- Fib Tec Composite – FRP/ GRP Equipments.
- Hydro Gen – HHO Generators
- Titanictrade – Portal for Exotic Metals
- – Tiaano Vidyashrm (CBSE Curriculum)




## திறமைகள்!

பூப்போல பறந்து போகும் பட்டாம் பூச்சியக்கா...என்று சோகமாய் பாடிக்கொண்டிருந்தது ஒரு தட்டான் பூச்சி.

அதன் பாட்டைக் கேட்ட பட்டாம்பூச்சி, இது என்ன... உன்னை யாரும் பிடித்து விளையாடவில்லை என்றால் சந்தோஷப்படுவதை விடுத்து கவலைப்படுகிறாயே... ஏன்? என்று கேட்டது வியப்புடன்.

பலவித வண்ணங்களில், அழகிய வடிவமைப்புகளில் பளபளக்கும் பட்டாம் பூச்சியே உன்னைக் கண்டு மகிழாதவர்கள் யாருமே இல்லை. ஆனால் என்னைச் சிறுவர்கள் மட்டுமே தேடிப்பிடித்து விளையாடி மகிழ்வர். நானும் நம்மைத் தேடவும் இவ்வுலகில் ஆளுண்டு என்று பிள்ளைகளுக்குப் போக்குக் காட்டி விளையாடி மகிழ்வேன்.

ஆனால் தற்சமயம் பிள்ளைகள் எல்லாம் தொலைக்காட்சிப் பெட்டி முன் தஞ்சமடைந்துவிட்டனர். அதனால் என்னைத் தேடுவோருமில்லை, கண்டுகொள்வாருமில்லை. ஏன்தான் பிறந்தோமோ என்று சலிப்பாக உள்ளது என்றது வேதனையுடன்.

அதைக்கேட்ட பட்டாம்பூச்சி, ப்பூ... இவ்வளவுதானா? உன்னை மற்றவர்கள் கண்டுக்கொள்ள வேண்டும் அவ்வளவுதானே? அது ஒன்றும் பெரிய விஷயமில்லை. இதற்காகச் சோர்ந்து போகாதே. உனக்குத்தான் பல வித்தைகள் தெரியுமே? அவற்றை செய், மற்றவர்கள் உன்னைத் தேடிவந்து பாராட்டுவார்கள்! என்றது சாதாரணமாக.

உண்மையாகவா? என்று வியந்த தட்டான்பூச்சி, தனக்குத் தெரிந்த வித்தைகளைக் காட்டத் தொடங்கியது.

ஜிவ்வென்று வானில் மேல்நோக்கிப் பறந்து குட்டிக்கரணம் அடித்தது. தலைகீழாய்ப் பறந்தது. நீர்ப்பரப்பில் ஒரு சிறு இலையைப் பற்றிக் கொண்டு பாதி உடலை மேலே தூக்கிக் கொண்டு நீந்திக் காட்டியது. அதையெல்லாம் அப்பகுதியில் திரிந்த பூச்சியினங்கள் கண்டு வியந்து போயின. அட உனக்குள் இவ்வளவு திறமையா? என்று ஆச்சரியமாய் பாராட்டிச் சென்றன.

அதுவரை சோர்ந்து கிடந்த தட்டான்பூச்சி, சக பூச்சியினங்களின் பாராட்டைக் கேட்டு பூரித்துப்போனது. பட்டாம்பூச்சிக்கு நன்றி சொல்லிவிட்டு, உற்சாகமகய்த் தனது சின்னச் சிறகை அசைத்துப் பறக்கத் தொடங்கியது தட்டான்பூச்சி.

*Compiled By : Ms. P. E. Nancy*
Director - Admin

## நோக்கம்

நோக்கம் ஓராண்டாயிருந்தால், பூக்களை வளர்ப்போம்
நோக்கம் பத்தாண்டாயிருந்தால், மரங்களை வளர்போம்.
நோக்கம் முடிவில்லாமலிருந்தால், மனிதகுலத்தை வளர்ப்போம்.

## FUNCTIONAL WISHES



Children's Day
14th November

**Best Wishes from Tiaano Employees**

## EXTERNAL SUPPORT

| | |
|---|---|
| Banking | : M/s. UCO Bank |
| Auditing | : M/s. Nisar & Kumar |
| AQ Auditing | : M/s. Juran Quality |
| Legal Advisers | : Lr. M.K. Govindan |
| | : Lr. V. Benedict Vincent |
| Tech. Consultant | : Dr.G.S. Viswanath |
| Central Excise | : Mr. R. Raghavan |
| Health Care | : M/s. Bethesda Hospital<br>Tel: 22294565 |
| ESI Corporation | : Tambaram Dispensary<br>Tel: 044 2226 0194 |

## BIRTH DAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே!
அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே!



**Mr. A. Mohan** — **10th Nov.**
Marketing

**Mr. B. Mathavan** — **14th Nov.**
Production

**Ms . M. Loganayagi** — **21st Nov.**
Coating

**Mr. D. Kingston Andrewspaul** — **30th Nov.**
Finance

**Best Wishes from Tiaano Employees**

"We have seize this unstable mind and drag it from its wanderings and fix it on one idea. Over and over again this must be done. By power of will we must get hold of the mind and make it stop and reflect upon the glory of God".

*-Swami Vivekananda*

### கான்.:.பிடன்ஸ் கார்னர்

அந்த மனிதருக்கு நண்பர்கள் உண்டு. ஆனால் அவர்கள் சொல்வதை அவர் கேட்பதில்லை. புதிதாக வீடு கட்டியிருந்தார். புதுமனை புகுவிழாவிற்கு நண்பர்களை அழைத்திருந்தார். எல்லா நண்பர்களுமே அந்த மனிதரின் அழகிய புகைப்படம் ஒன்றை பெரிதாக்கி சட்டமிட்டு அன்பளிப்பாக ஆளுக்கு ஒன்றை அளித்தார்கள்.

காரணம் கேட்டபோது நண்பர்கள் சொன்னார்கள் "உனக்கு நிலைக்கண்ணாடியைப் பரிசளிக்க நினைத்தோம். ஆனால் உள்ளதை உள்ளபடி காட்டுவது உனக்கு பிடிக்காது. எனவே புகைப்படங்களைப் பரிசளித்துவிட்டு உன் வீட்டில் உள்ள கண்ணாடிகளைக் கழற்றிச் செல்லத் தீர்மானித்தோம்.

கற்பனை உலகில் உண்மைகளை எதிர் கொள்ளாமல் உன் விருப்பம் போல வாழலாம்" என்றார்கள். ஆதிர்ச்சி வைத்தியம் பயனளித்தது. விமர்சனங்களை ஏற்கத் தொடங்கினார் அவர்.

— கான்.:.பிடன்ஸ் கார்னர் என்ற நூலிலீருந்து தொகுக்கப்பட்டது

### புத்தியை தீட்டு

ஒரு காட்டிற்கு இரண்டு மரவெட்டிகள் சென்றார்கள், மாலை மீண்டும் இருவரும் கூடும் போது ஒருவரிடம் அதிக விறுகும் மேலும் அவர் அதிக களைப்படையாமலும் இருந்தார். மற்றொருவருக்கோ பயங்கர ஆச்சரியம்.

நம்மை போல் தானே அவனும், அவனால் மட்டும் எப்படி இது சாத்தியமானது என்று. ஆர்வம் தாங்காமல் அவனிடமே கேட்டு விட்டான்.

நண்பன் அவனிடம் கேட்டான், இந்த விறகுகளுக்காக நீ என்ன செய்தாய் என்று! அவன் சொன்னான், இடைவிடாமல் வெட்டிக் கொண்டே இருந்தேன் எள்று,..

சிறிதும் ஓய்வு இல்லாமலா என்று கேட்டான் நண்பன், ஆம் அதிக விறகுகள் பெற வேண்டுமே ஆனால் நீ கொஞ்சமும் களைப்படையாமல் இருப்பது எப்படி என்று கேட்டான்!..

நான் இடையில் அடிக்கடி ஓய்வு எடுத்துக் கொள்வேன் என்று சொன்னான் நண்பன்.

மறுநாள் அவனும் அதே போல் ஓய்வு எடுத்து எடுத்து மரம் வெட்டினான், இருப்பினும் அவனால் நண்பன் அளவுக்கு மரம் வெட்டமுடியவில்லை, மறுநாள் மரம் வெட்டும் போது ஒளிந்திருந்து பார்க்க வேண்டும் என்று திட்டமிட்டு வீடு திரும்பினான்.

மறுநாள் மரம் வெட்ட பிரிந்து சென்ற பின், அவன் நண்பனை பின் தொடர்ந்து சென்றான், நண்பனும் அரைமணி நேரம் மரம் வெட்டி விட்டு ஓய்வாக அமர்ந்தான், ஆனால் அவன் ஓய்வு நேரத்தில் அவனது கோடாலியை தீட்டிக் கொண்டிருந்தான்!.

*Compiled By : Mrs. P. Sridevi*
Purchase

## தெரிந்து கொள்வோம்

### Important Contacts

Ti Anode : 044-22781148 / 9444569900
Tiaano Vidyashrm : 044-27174574 / 9444589900
Fib Tec : 9444579900
Police Station(Selaiyur) : 044-22396003
Bethesda Hospital (Camp road) : 044-22294565/ 044-22294562
Fire Security Service(pallikarnai) : 04422460564
EB Office (Madambakkam) : 044-22280044
Post Office (Selaiyur) : 044-22279793

### பேரீச்சம்பழத்தின் மருத்துவ பண்புகள்

- ✓ தினமும் இரவில் படுக்க செல்லுமுன் ஒரு டம்ளர் காய்ச்சிய பசும் பாலையும், இரண்டு பேரீச்சம் பழத்தினையும் உண்டு வந்தால் உடல் நல்ல பலம் பெறும்.
- ✓ கண் சம்மந்தமான கோளாறுகளையும் நீக்கும் சக்தி பேரீச்சம்பழத்திற்கு உண்டு.
- ✓ புதிய ரத்தமும் உண்டாகும். தோல் பகுதிகள் மிருதுவாகவும், வழுவழுப்பாகவும் இருக்கும்.
- ✓ தொற்று நோய் கிருமிகள் நம்மை அணுகாமல் பேரீச்சம்பழம் நம்மை காக்கிறது.
- ✓ பல் சம்மந்தமான வியாதிகளும் குணமடைந்து, பல் கெட்டிப்படும்.
- ✓ சளி, இருமல், ஆஸ்துமா விரைந்து சரியாகும்.
- ✓ மலச்சிக்கல் நீக்கி குடலை பாதுகாக்கும்.
- ✓ உடல் உறுதி கூட்டும் உயர்ந்த உணவு.

### இடுப்பு வலி மற்றும் முதுகு வலி குறைய:

வெற்றிலைகளை எடுத்து சாறு பிழிந்து தேங்காய் எண்ணெயில் கலந்து வலி இருக்கும் இடத்தில் தடவி வந்தால் இடுப்பு வலி மற்றும் முதுகு வலி குறையும்.

### செயற்கை மழை சாத்தியமே!

சில்வர் அயோடைடு வேதிப்பொருளை மேகங்களின் மீது வானில் தூவுவது, மிக அதிகமான பரப்பில் உலர் பனிக்கட்டித் துகள்களை தூவுதல், உப்புத் துகள்களை மேகங்களின் மீது தூவி மேகங்களைக் குளிரச் செய்து நீர்த் திவலைகளை உண்டாக்குவது போன்ற செயற்கை முறைகளே இது வரை கையாளப்பட்டு வந்த கண்டுபிடிப்புகள் ஆகும். அதாவது மேகங்களில் நீராவி யாக இருக்கும் நீர்த் திவலைகளை குளிரச்செய்து நீர்த்துளியாக மாற்று வதற்கு ஏதேனும் ஒரு பொருள் தேவைப்படுகிறது. இந்த முறைகள் பாதி வெற்றியையே தந்துள்ளது.ஆனால் முழுமையான வெற்றியைத் தரவில்லை. தற்போது ஜெனீவா பல்கலைக் கழகத்தின் ஆராய்ச்சிக்குழு முற்றிலும் மாறுபட்ட புதிய நுட்பமான முறையை கையாண்டு அதில் வெற்றியும் பெற்றுள்ளது. அது லேசர் கதிர்களை பயன்படுத்தி மேகங்களை உண்டாக்கி மழை பொழியச் செய்வது. இதன் ஒரு பகுதியாக லேசர் கதிர்களை செலுத்தி ஆய்வகங்களிலும், வான்வெளியிலும் பரிசோதித்து வெற்றி கண்டுள்ளது. ஆய்வகத்தில், அதிக ஆற்றலை யுடைய வானிலிருந்து வரக்கூடிய, துணை அணுத்துகளான காஸ்மிக் கதிர்களை கண்டறியப் பயன்படும் மேக கலன் (கிளவுட் சேம்பர்) அல்லது அறையை உபயோகப்படுத்தினர். அதனுள் அதிக ஆற்றலுடைய துகள்களை செலுத் தும்போது, நீர்மூலக் கூறுகளில் உள்ள எலெக்ட்ரான்களை விடுபடவைக்கிறது. இதனால் அது மின்னூட்டம் பெற்ற துகள்களாகி, ஒரு மெல்லிய தூசி போல செயல்பட்டு நீர்த் திவலைகளாக மாற உதவுகிறது என்பதை கண்டுபிடித்தனர்.

இவர்களைப் போலவே சுவிஸ் ஆராய்ச்சியாளர்கள், அதிக பலம் வாய்ந்த அகச் சிவப்பு லேசர் கதிர்களை கிளவுட் சேம்பர் (மேக அறை) உள்ளே செலுத்தும்போது கலன் – 240 சென்டி கிரேடாக அதன் வெப்பம் குளிர்ந்து நீராவி மேகம் உருவாகிறது. அந்த ஆய்வில் முதலில் 50 மைக்ரோ மீட்டர் விட்டமுடைய நீர்த் துளிகள் உருவாகி றது. அதன்பின் அடுத்த 3 நொடிகளில் அது 80 மை. மீ. விட்டமுடைய நீர் துளிகளாக மாறுகிறது. மேலும் லேசர் கதிர்களை வானில் செலுத்தும்போது நீராவி குளிர்வடைந்து நீர்த் துளிகளாக மாறுகிறது. இவ்வாறு குளிர்வடைவதை இரண்டாவதாக மற்றொரு லேசரைக் கொண்டு கண்டுபிடிக்கப்பட்டது. இவ்வாறு செயற்கை மழை உருவாக்குவதில் சாதனை செய்துள்ளனர்.

*Compiled By : Mr. K. Manivannan*
*Marketing*

### நம்பித்தான் ஆகவேண்டும்
### 5S (தொடர்ச்சி LVIII)

**மின்னும் சுத்தம்**

ஒருவர், அந்தத் தோலில் காலை வைத்துவிடாதபடி கவனமாகக் கடந்து செல்கிறார். அதன்பிறகு அதைப்பற்றி அவர் கவலைப்படுவதில்லை.

இரண்டாவது ஆள், இதை என்ன செய்யலாம் என்று யோசிக்கிறார். அலுவலகத்தைச் சுத்தம் செய்வதற்காகவே ‘சுப்பம்மா’ என்ற ஒரு பெண்ணைச் சம்பளம் கொடுத்து நியமித்திருக்கிறோம். அவள் இதையெல்லாம் பார்த்துக்கொள்வாள் என்று எண்ணியபடி, அவரும் தன் வழியே சென்றுவிடுகிறார்.

மூன்றாவது ஆள், ‘ஏ சுப்பம்மா!’ என்று அந்தப் பெண்ணை அழைத்து

## கவிதைகள்

### நம்பிக்கை

இனிதாய் தொடர்ந்த இன்பப் பயணத்தில்
இடையில் தோல்வி என்னும் பாதை வரலாம்
தடைக் கற்களும் உன்னால் செதுக்கப்பட
வேண்டும் வெற்றிப் படிக்கற்களாக...

### நட்பு

தனிமையும் எனக்காய் யார் என்ற
வினாவும் வரும்போது எளிமையாய்
என்முன் வருவது நின் நட்பு மட்டுமே.

### பேச்சின் சிறப்பு

கோபமாய் பேசினால்
குணத்தை இழப்பாய்!

வேகமாய் பேசினால்
அர்த்தத்தை இழப்பாய்!

வெட்டியாய் பேசினால்
வேலையை இழப்பாய்!

அதிகமாய்ப் பேசினால்
அமைதியை இழப்பாய்!

ஆணவமாய் பேசினால்
அன்பை இழப்பாய்!

சிந்தித்து பேசினால்
சிறப்போடு வாழ்வாய்!

*Collected From Internet*

## ஹைக்கூ

தோற்றம் மறைவு சாமானியர்களுக்குத் தான் சாதனையாளர்களுக்கு இல்லை.

## சிந்தனைக்கு

வெற்றி என்பது ஒவ்வொரு முறையும் முதல் இடத்தைப் பெறுவது என்று பொருள் அன்று. வெற்றி பெற்றாய் என்றால் உன் செயல்பாடு சென்ற முறையை விட இம்முறை சிறப்பாக அமைந்துள்ளது என்று பொருள்.

**பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் குடும்பத்தாரிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள், கதைகள் வரவேற்கப்படுகிறது.**
**– Editor**

'இதுதான் நீ சுத்தம் செஞ்ச லட்சணமா?' என்று அதட்டுகிறார். அந்தப் பெண், வேறு ஏதோ வேலையின் மத்தியில் இருக்கிறாள். அதை முடித்துவிட்டு வந்து, இதை உடனடியாகச் சுத்தம் செய்துவிடுகிறேன் என்று உறுதி சொல்லிவிட்டு, தன்னுடைய வேலைக்குத் திரும்பிவிடுகிறாள் அவள்.

அப்போது அங்கே வரும் நான்காவது நபர், அந்த வாழைப்பழத் தோலை எடுத்து, குப்பைத் தொட்டியில் போடுகிறார்.

இந்த நான்கு பேரில், யாருடைய நடவடிக்கை சரியானது என்கிற விவாதம் ஒருபக்கமிருக்க, இந்தப் பிரச்னையைச் சந்தித்த நால்வருமே, அதைப்பற்றி யோசிப்பதற்காக மற்றும் எதிர்வினை செய்வதற்காகச் சிறிது நேரமாவது செலவிட்டிருக்கிறார்கள். இவர்களுள், மிகக் குறைந்த நேரம் செலவிட்டவர் யார் என்று யோசித்துப்பாருங்கள்.

ஆச்சரியம். பிரச்னையை நிரந்தரமாகத் தீர்த்துவைத்த அந்த நான்காவது நபர்தான், மிகக் குறைந்த நேரம் செலவிட்டிருக்கிறார். காரணம், ஒரு குப்பை கிடக்கிறது என்றதும், அதை நீக்கவேண்டியது யாருடைய பொறுப்பு என்கிற சிந்தனைக்கு அவர் போகவில்லை, யாரையும் தேடவில்லை. ஊடனடியாக அதைத் தூக்கிக் குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டார், கால் நிமிஷத்தில் பிரச்னை தீர்ந்தது.

ஏதிர்ப்படுகிற குப்பையெல்லாம் நீக்கப்படவேண்டிய குப்பை. யாருக்காகவும் காத்திருக்காமல் அதை உடனே செய்துமுடிப்போம் என்கிற இந்த மனோபாவம்தான், 'செய்சோ'வின் பிரம்ம சூத்திரம்.

தொடரும்...

